## 1.5 பெற்றுக்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கை முறைகள்

இவ்வலுவலகத்தால் பெறப்படும் ஒவ்வொரு முறைப்பாடும் ஓர் தனி பதிவேட்டில் பதியப்படுகிறது. ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் விசேட இலக்கம் வழங்கப்படுகிறது. அதன் பின்னர் முறைப்பாடுகள் ஓய்வூதியம், விதவைகள் அநாதைகள், சம்பள முரண்பாடுகள், சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள், காணி, அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்கள் ,சேவை முடிவுறுத்தல், பதவியில் மீளஅமர்த்தல், பல்கலைக்கழக / பாடசாலை அனுமதி, அதிகார துஷ்பிரயோகம் என்பன போன்ற விடயங்களுக்கு அமைய வகுக்கப்படுகின்றன. அவை குறிப்பிட்ட விடயங்களாக ஒதுக்கப்பட்டு இவ்வலுவலகத்தின் அலுவலர்களால் நிர்வாகிக்கப்படுகிறன. அவ்வலுவலர்கள் அரசாங்கசேவையின் "முகாமை சேவை அலுவலர்" வகுதியினரை சேர்ந்தவர்களாகும். முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டதும் அம்முறைபாடு ஏற்புடைய முகாமை சேவை அலுவலருக்கு (விடய எழுதுநர்) அனுப்பப்படும். அதன்பின்னர் அவர்கள் ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் ஒரு கோவையை திறப்பார்கள். விடய தலைப்பு தெரிவானது அலுவலகத்தின் பிரதம முகாமை சேவை அலுவலரால் மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பிட்ட முறைபாடு தொடர்பில் கோவை திறக்கப்பட்டதும் முறைபாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை எழுதுநர் சுருக்கமாக குறிப்பு எழுதுவார். அதன்பின்னர் அவர் நிர்வாக அலுவலருடன் முறைப்பாடு தொடர்பான தன்மையை விவாதிப்பார் பின்னர் இருவரும் ஒம்புட்சுமானை சந்தித்து முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக அவருடைய ஆலோசனையையும் உதவியையும் பெற்றுக்கொள்வார்கள்.

மிகவும் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நடைபெறும். அக்கலந்துரையாடலில் இணைக்கப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் பெறப்பட்ட முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்ட விடயத்தை ஒம்புட்சுமான் கவனமாக ஆராய்வார். மிகவும் முக்கியமான விடயமாக முறைபாடு / சார்த்துதல் ஒம்புட்சுமானின் நியாயாதிக்கத்திற்குள் அமைந்துள்ளதா என உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஆராயப்படும். இப்பிரச்சனை பற்றி தீர்மானிக்கும் போது நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் ( இதன்பின்னர் சட்டம் என குறித்துரைக்கப்படும்) பிரிவுகள் 10, 11, மற்றும் 17 இல் காணப்படும் விடயங்களை ஒம்புட்சுமான் கவனத்தில் கொள்வார். இம்முறைப்பாடு சட்டத்தின் எல்லைக்குள் இல்லாவிட்டால் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாமைக்கான காரணங்களை உள்ளடக்கி முறைபாட்டாளருக்கு உடனடியாக தெரியப்படுத்தப்படும்.

இம்மனு தொடர்பாக நடவடிக்கை தொடர்வதற்கு ஒம்புட்சுமான் தீர்மானிக்கும் போது ஒவ்வொரு முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் சார்பாக பொருத்தமான ஒழுங்குகளை மேற்கொள்ளுவார். முறைப்பாட்டாளரினால் கோரப்படும் நிவாரணம் மற்றும் யாருக்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது போன்ற மேலதிக தகவல்களை பெறுவது அவசியம் என ஒம்புட்சுமான் கருதுவாரானால், அவ்வகையான தகவல் மனுதாரரிடமிருந்து கோரப்படும். அதன்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தாமதமின்றி இவ்வழக்கை முடிவுறுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது எனினும் இம்முயற்சி முறைப்பாட்டின் இயல்பில் தங்கியுள்ளது.

பொதுவாக இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டதும் எவ்வலுவலர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதோ அவ் அலுவலர்களை விட உயர் பதவியில் உள்ள அலுவலர்களிடமிருந்து கருத்தறிவிப்பு கோரப்படுகிறது. கருத்தறிவிப்பு அனுப்பப்பட்டதும் அதற்கு அவ்வதிகாரிகள் நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. மாறாக சில சந்தர்ப்பங்களில் கருத்தறிவிப்பை பெற்றுக்கொள்வதற்கு

பல நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பவேண்டியிருந்தது. சில சந்தர்ப்பங்களில் ஒம்புட்சுமான் பல நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியதன் பின்னரே சுமாரான எண்ணிக்கையிலான முறைப்பாடுகளுக்கு அர்த்தமுள்ள விளைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சிலவேளை சாதாரண நடைமுறைகளூடாக ஒம்புட்சுமானால் நியாயமான தீர்மானத்தை எட்ட முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் குழுக்கள் இவ்வலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு குழுக்களும் தமது வாதங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கி இயற்கை நீதியின் விதிகளை அவதானித்து விசாரணை நடாத்தப்படுகிறது. அடிப்படை உரிமை மீறல் அல்லது அநீதி ஏற்பட்டுள்ளது என நிரூபிக்கும் போதெல்லாம், ஒம்புட்சுமான் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்குவதற்கு முயற்சி செய்வார். அந்நடவடிக்கையின் மூலம் நியாயமான தீர்மானமொன்றை நிறைவேற்ற தவறும் பட்சத்தில் அவ்விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும். ஒம்புட்சுமான் தனது சகல முயற்சிகளிலும் தீர்வு காண முடியாதுபோனால், அவர் அப்பிரச்சனை தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொண்டு குறித்த காலப்பகுதிக்குள் அத்தீர்மானத்தை அமுல்படுத்துமாறு பிரதிவாதிக்கு அறிவிப்பார்.

அக்குறித்த காலத்தினுள் எந்நடவடிக்கையும் மேற்கொள்ளாவிடின் ஒம்புட்சுமான் தனது அறிக்கையின் பிரதியொன்றை சனாதிபதிக்கு அனுப்புவதுடன் பாராளுமன்றத்திற்கும் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அனுப்பப்படும். ஒம்புட்சுமான் அலுவலகம் இதன்முன்னர் குறித்துரைத்த செயற்பாட்டை பின்பற்றுவதில் உறுதி கொண்டுள்ளது.

மேலே கூறப்பட்ட முறையில் மனுக்கள் தொடர்பிலான நடைமுறைகளை மேற்கொண்டு அதன்பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒம்புட்சுமானின் தலையீட்டை நாடிய விண்ணப்பதாரர்களுக்கான நிவாரணங்கள் இவ்வலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது தொடர்பில் வேறுபட்ட பகுதிகளை உள்ளடக்கிய சில விடயங்களை தற்போது குறித்துரைப்பதன் மூலம் இவ்வலுவலகத்திற்கு முன்வைக்கப்படும் மனுக்களின் சரியான இயல்பு மற்றும் வகைகள் தொடர்பிலான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

திரு.டபிள்யூ.ஏச்.புண்யதாச என்பவர் அவரது குடும்பத்தில் மூத்த மகன் ஆவார். இலங்கை மகாவலி அதிகாரசபையால் அவரது தகப்பனாருக்கு வழங்கப்பட்ட ද.ලු.ඊ 73/4 என்னும் இலக்கம் கொண்ட நீர்பாசன காணித்துண்டை உடமையாக கொண்டிருந்தார். ஆனால் அவரது தகப்பனாரினால் அக்காணியின் சொத்துடைமை அவரது தங்கை டபிள்யூ.ஏச்.மானேல் பிரியந்திக்கு வழங்கப்பட்டிருந்தது. எனவே 26 வருடங்களாக அக்காணியின் சொத்துடமையை பெறுவதற்கு முயற்சி எடுத்தும் அவரால் அவ்வுடமைகான உரிமையை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவ்விடயம் பற்றி எமக்கு முறையிட்டுள்ளார்.

அதற்கமைய, இவ்விடயம் தொடர்பாக மகாவலி அதிகார சபையிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டன. அவ்வறிக்கையில் இப்பிரச்சனைக்கு உட்பட்டுள்ள 127 ஹெட்டயர் கொண்ட நீர்பாசன காணிக்கு මෙ/ළව/ජර/බි/54 என்னும் இலக்கம் கொண்ட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அக்காணியின் பின்னுரித்தாளரான அவரது மகளின் பெயரான வெவல்வல கெட்டிகே மானேல் பிரியந்தி என்னும் பெயரே பதியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. மனுதாரர் அக்காணியை வலுக்கட்டாயமாக அபிவிருத்தி செய்து உடமையாக கொண்டுள்ளார். இவ்விடயத்தை கருத்தில் கொண்டு மகாவலி அபிவிருத்தி சபையிடம் சம்பந்தப்பட்ட மனுதாரர் நீண்டகாலமாக உடமையாக கொண்டிருந்த நீர்பாசன காணியை மனுதாரர்க்கு வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. அதற்கமைய சகோதரியின் சம்மதம் கோரப்பட்டது. திரு. டபிள்யூ.ஏச்.மானேல் பிரியந்தி விசாரணைக்கு அழைக்கப்பட்டார், ஆனால் அவரின் சகோதரி சமுகமளிக்கவில்லை.

இறுதியாக திரு. டபிள்யூ. ஏச். மானேல் பிரியந்தியின் முகவரி இலங்கை மகாவலி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. அந்த ஏற்புடைய நீர்பாசன நிலம் திரு.டபிள்யூ.ஏச். புண்ணியதாசவுக்கு வழங்குவது தொடர்பில் இணக்கம் கோரப்பட்டது. அதற்கு அவர் சந்தையில் தற்போதுள்ள காணியின் விலைமதிப்புக்கு ஈடான தொகையை தனக்கு வழங்கினால் அக்காணியின் சொத்துரிமையை மாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தார். அதன் பின்னர் நாம் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு இதுபற்றி அறிவித்து திரு.டபிள்யூ.ஏச்.புண்ணியதாசவுக்கு வழங்கும் சாத்தியமான நிவாரணம் தொடர்பாக ஆராயப்பட்டது. இலங்கை மகாவலி அதிகாரசபை இரண்டு பகுதியினரையும் அழைத்து விசாரணை செய்து நீர்பாசன காணி தொடர்பில் அவசியமான நடவடிக்கை எடுத்த பின்னர் இறுதி முடிவொன்று எடுக்குமாறு இலங்கை மகாவலி அதிகார சபையின் காணி பிரிவுக்கு அறிவித்தது. மனுதாரருக்கு இவ்விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்டது. மனுதாரர் தனது 2020.11,27 ஆம் திகதிய கடிதம் மூலம் தான் 26 வருடங்களாக இவ்விடயம் தொடர்பில் கஷ்டங்களை அனுபவித்து வந்ததாகவும் எமது நிறுவனத்தின் தலையீட்டால் இப்பிரச்சனைக்கான தீர்வு கிடைத்துள்ளதாகவும் அதற்கு நன்றியை தெரிவிப்பதாக அறிவித்துள்ளார்.

**கோவை இலக்கம்- OMB/P/2/4/4628** **பெயர்- திருமதி. டி.எம்.என்.ஏ.திசாநாயக்க**

மனுதார் திருமதி.டி.எம்.என்.ஏ. திசாநாயக்க 1993 ஆம் ஆண்டில் மருந்தாளராக நியமிக்கப்பட்டு மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் 2015.07.29 ஆம் திகதி வரை பணியாற்றினார். அங்கு பணியாற்றி கொண்டிருந்த வேளை அவருக்கு மருந்தாளர் பதவியில் விசேட தரத்திற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட மனுதாரர் இவருடன் பதவியுயர்த்தப்பட்ட மூன்று அலுவலர்களுக்கும் 2013.01.01 ஆம் திகதியிலிருந்து பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் தனக்கு பிறகு விசேட தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற இரண்டு அலுவலர்களுக்கும் 2013.01,01 இற்கு பிற்தேதியிட்டு பதவியுயர்வு வழங்கி தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக எமக்கு முறைப்பாடு செய்துள்ளார். எனவே தனக்கும் பிற்தேதியிட்டு 2013.01.01 ஆம் திகதியிலிருந்து பதவியுயர்வு வழங்குமாறு கோரியுள்ளார்.

அதற்கமைய, இவ்விடயம் தொடர்பாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டன. அதில் முதலில் மத்திய மருந்தாளர் பதவியில் 03 விசேட தரங்களுக்கு 2013.05.20 ஆம் திகதியில் அங்கீகாரம் வழங்கப்பட்டு பதவி, மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மூன்று அலுவலர்கள் 2014.08.15 ஆம் திகதி நியமிக்கப்பட்டனர். இவ்வலுவலகங்களில் ஒருவர் ஓய்வூதியம் பெற்று சென்றுள்ளதால் நான்காவது இடத்தில் இருந்த அலுவலர் 2014.04.27 ஆம் திகதியிலிருந்து மருந்தாளர் விசேட தரத்திற்கு நியமனம் பெற்றுள்ளார். எவ்வாறாயினும் மத்திய மாகாண மருந்தகர் விசேட தரத்தில் 2 பதவிகளுக்கே 2013.01.01 ஆம் திகதி செயல்வலுப் பெறும் வண்ணம் 2015.08.05 ஆம் திகதி இரண்டாவது தடவையாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததால், முதற் தடவையாக விசேட தரத்திற்கு நியமிக்கப்பட்ட மூன்று அலுவலர்களும் அவர்களது கோரிக்கையின்றி 2013.01.01 ஆம் திகதியிலிருந்து பிற்தேதியிடப்பட்டது. அதற்கமைய மனுதாரரை விட பதவி மூப்பு, மற்றும் திறமை குறைவாக கொண்டுள்ள இரண்டு அலுவலர்கள் 2013.01.01 ஆம் திகதியிலிருந்து செயல் வலுப்பெறும் வண்ணம் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அதேவகையில் பதவியுயர்த்தாது மனுதாரர்க்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஏற்புடைய விடயங்களை அறிவுறுத்திய பின்னர், திணைக்களம் 2013.01.01 ஆம் திகதியிலிருந்து மனுதாரர்க்கு வழங்கப்பட வேண்டிய விசேட தரத்திற்கான பதவியுயர்வை வழங்கி இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதற்கமைய முறைப்பாட்டாளர் ஏற்புடைய நிறுவனங்களிடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்தும் தீர்க்கப்படாத பிரச்சனையை எமது நிறுவனம் தலையிட்டு தீர்த்து வைத்துள்ளது.

**கோவை இலக்கம்- OMB/P/2/4/4414** **பெயர்- திருமதி.எஸ்.என்.சி.தயாரட்ண**

திருமதி.எஸ்.என்.சி. தயாரட்ண என்னும் முறைப்பாட்டாளர் 2015.12.18 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கல்வி நிர்வாக சேவை தரம் 11 இற்கான வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு விண்ணப்பித்து சித்தி பெற்றுள்ளார். அதன்பின்னர் இப்பதவிக்கு தெரிவு செய்யும் பொருட்டான வாய்மொழிப் பரீட்சைக்கு தோற்றியுள்ளார். அவருடைய பட்டப்படிப்பில் மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் என்னும் பாடம், பாடங்களின் விடய இணைவு சேர்க்கையின் 1/3 பங்காக இருக்கவில்லை என கூறி அவருக்கு நியமனம் வழங்கப்படவில்லை என எமக்கு முறைப்பாடு செய்துள்ளார் அத்துடன் அடிப்படை தகமைகளைப் பூர்த்தி செய்துள்ள அவருக்கு அந்நியமனம் வழங்கப்படுதல் வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கமைய, பொது சேவைகள் ஆணைக்குழுவின் கல்வி சேவை குழுக்களிடமிருந்து அறிக்கை கோரப்பட்ட பின்னர், கல்வி அமைச்சு மற்றும் பொதுசேவை ஆணைக்குழுவின் கல்வி சேவைகள் குழு என்பவற்றில் சேவைபுரியும் ஏற்புடைய அதிகாரிகளின் பங்குபற்றலுடன் விசாரணையொன்று நடாத்தப்பட்டது. விசாரணையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களுக்கு அமைய ஏற்புடைய பல்கலைக்கழகம் அவரது பட்டப்படிப்பின் பாடவிதானத்தில் மாணவ ஆலோசனையும் வழிகாட்டலும் விடய சேர்க்கையில் 1/3 பங்கு இணைவு பாடமாகவுள்ளது என பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தினால் நியமனம் வழங்க முடியும் என கூறப்பட்டது, அதற்கமைய, எமது நிறுவனம் இது தொடர்பாக, கொழும்பு பல்கலைகழகத்திற்கு அறிவித்து அது தொடர்பில் உறுதிப்படுத்தியது. அதன்பின்னர் பொது சேவைகள் ஆணைக்குழுவின் கல்வி சேவைகள் குழு மனுதாரருக்கு கல்வி நிர்வாகத்தில் நியமானம் வழங்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எனவே சகல தகைமைகளையும் பூர்த்தி செய்து நியமனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதுபோன மனுதாரர் இந்நிறுவனத்தின் தலையீட்டின் மூலம் ஏற்புடைய நியமனத்தை பெற்றுக் கொள்ள முடிந்தது.

**கோவை இலக்கம் - OMB/P/2/5/3347** **பெயர்- திரு. டீ.ஏ.பீ.கருணாரட்ண**

பலவத்தல, கோகரல்ல, இலக்கம் 105/1 இல் வதியும் திரு.டீ.ஏ.பீ.கருணாரட்ண என்பவர் இடமாற்றம் வழங்காதது பற்றி எமக்கு 2020.03.02 ஆம் திகதியிடப்பட்ட முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார். முறைப்பாட்டாளர் 2014.05.05 ஆம் திகதியிலிருந்து கொழும்பு 10, வணக்கத்துகுரிய பத்தகம விமலவன்ச தேரோ மாவத்தை , இலக்கம் 357 இல் அமைந்துள்ள விநியோக பிரிவில் கடமையாற்றி கொண்டிருந்தார். அவர் 2018.04.12 ஆம் திகதி குருநாகலில் உள்ள மாகாண மருந்து விநியோக பிரிவில் உள்ள வெற்றிடத்திற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பதித்துள்ளார். சுகாதார அமைச்சு அவரை வடமேல் மாகாண பொது சேவை ஆணைக்குழுவிற்கு விடுவிப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தும், மருந்தகர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட தவறை மேற்கோள்காட்டி அவரை வடமேல் மாகாண பொது சேவை ஆணைக்குழுவிற்கு விடுவிப்பதற்கு மறுத்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக மருந்து விநியோக பிரிவின் பணிப்பாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் முறைப்பாட்டாளரை விடுவிப்பதற்காக நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், தேர்தல் முடிவடைந்ததும் மனுதாரரை வடமேல் மாகாண பொது சேவைகள் ஆணைக்குழுவிற்கு விடுவிப்பதாக அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து மனுதாரர் 2020.09.09 ஆம் திகதியிடப்பட்ட தனது கடிதத்தில் தான் வடமேல் மாகாண பொது சேவைக்கு எமது அலுவலகத்தின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டதாகவும் தான் எமது அலுவலகத்திற்கு தனது பிரச்சகையை முன்வைத்ததன் விளைவாக இன்று மகிழ்ச்சியுடன் இருப்பதாக அறிவித்திருந்தார்.

திருமதி. கே.ஏ.விமலாவதி என்பவரினால் 2014.10.10 ஆம் திகதி அனுப்பப்பட்ட முறைப்பாட்டில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. அம்முறைபாட்டில் முறைப்பாட்டாளர் 1960 ஆம் ஆண்டில் சட்ட ரீதியாக திரு.எம்.டீ. பீட்டர் என்பவரை திருமணம் செய்திருந்தார். அவருடைய கணவர் 1980 ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாள 7 வருடங்களாக காணாமல் போயிருந்தார். அந்த திருமணத்தில் அவர் 6 குழந்தைகளை வளர்க்க வேண்டிருந்தது. திரு.பீட்டர் என்பவர் இறந்து விட்டார் என நினைத்து முறைப்பாட்டாளர் திரு. விஜேசிறி தர்மரட்ண என்பவரை 1990 ஆம் ஆண்டில் திருமணம் செய்துள்ளார். 04 வருடங்களின் பின்னர் அதாவது 1994 ஆம் ஆண்டில் சுகவீனமுற்ற முதலாவது கணவர் மனைவியை தேடிவந்துள்ளார். எனவே இரண்டாவது கணவர் மனைவியை விட்டு சென்றுள்ளார். அதன்பின்னர் அவர் முதலாவது கணவருடன் வாழ்க்கை நடாத்த தொடங்கினார். சில வருடங்களின் பின்னர் அவருடைய கணவர் திரு.எம்.டி. பீட்டர் 1997 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். அவர் இறந்த பின்னர் மனைவி விதவைகள அநாதைகள் ஓய்வூதியத்தை பெற்றுள்ளார். எவ்வாறாயினும் அவருடைய முதல் கணவர் உயிருடன் இருந்த போது வேறு நபரை திருமணம் முடித்துள்ளார் என்னும் குற்றச்சாட்டில் அவருடைய விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவு 2009 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டது. மேலும் 2012 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவாகரத்து வழக்குக்கு அமைய திரு.தர்மரட்ணத்துடனான விவாகம் வலுவற்றது என நீதிமன்றம் தீர்பளித்தும் முறைப்பாட்டாளருக்கு விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் வழங்குவதற்கு ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என முறைப்பாட்டாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறிக்கை கோரப்பட்டதன் பின்னர், ஓய்வூதிய கோவையின் உறுப்புரை 3(1)(1) இற்கு அமைய, இரத்தினபுரி மாவட்ட நீதி மன்றம் ஆரம்பத்திலிருந்தே திரு.தர்மரட்ணத்துடனான விவாகம் வலுவற்றது என தீர்மானித்த காரணத்தினால் முறைப்பாட்டாளருக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு எனவும் எனவே ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் என எமது நிறுவனம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு சிபாரிசு செய்தது.

எமது நிறுவனத்தின் தலையீட்டின் மூலம் 2016 ஜனவரியிலிருந்து முறைப்பாட்டாளருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. ஆனால் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2015 டிசெம்பர் வரையிலான காலப்பகுதி ஓய்வூய கொடுப்பனவு நிலுவைகள் வழங்கப்படாது என ஓய்வூதிய திணைக்களம் அறிவித்தது. 2016 ஆம் ஆண்டிலிருந்து நீண்டகால கோரிக்கைகளுக்கு பின்னரும் கூட ஓய்வூதிய திணைக்களம் நிலுவைகளை வழங்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அதன்பின்னர் நாம் நிர்வாக அமைச்சின் செயலளாருக்கு ஏற்புடைய கொடுப்பனவுக்கான அவருடைய அதிகாரத்தையும் அங்கீகாரத்தையும் பிரயோகிக்குமாறு அறிவித்தோம். அதன் பின்னர் பொது நிர்வாக அமைச்சுக்கும், ஓய்வூதிய திணைக்களத்திற்கும் இடையிலான கடித தொடர்புகள் தாமதமடைவதால், 2019.03.19 ஆம் திகதியன்று நிர்வாக அமைச்சின் செயலாளர் விசாரணைக்கு அழைக்கபட்டார். பின்னர் ஓய்வூதிய திணைக்களம், இவ்விடயம் தொடர்பாக 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016.01.01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய கொடுப்பனவை வழங்குவதற்கு நிர்வாக அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக எமக்கு அறிவித்தது. அதற்கமைய ஓய்வூதிய திணைக்களம் அந்த நிலுவைகளை 2020 நவம்பரில் வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்திருந்தது.

முறைப்பாட்டாளர் பலவருடங்களாக ஏற்புடைய அதிகாரிகளுக்கு தனக்கு நிலுவைகளையும் ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்குமாறு அறிவித்திருந்தும் அவர்கள் சாதகமான பதில்களை வழங்கவில்லை. எனவே முறைப்பாட்டாளர் இது தொடர்பில் 2015 ஆம் ஆண்டில் தனது ஓய்வூதியத்தை பெற்றுத்தருமாறு கோரி எமது அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்த போது, எமது அலுவலகம் 2016 ஆம் ஆண்டிலிருந்து விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டுவரை நிலுவைகள் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

**கோவை இலக்கம்- OMB/P/2/9/804** **பெயர்- திரு.ஏ.எம்.சேனநாயக்க**

முறைப்பாட்டாளர் திரு.ஏ.எம். சேனநாயக்கா 2005.04.25 ஆம் திகதியன்று அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். அவர் அரசாங்க சுகாதார வெளிகள உதவியாளராக இருந்து இலங்கை தொழில்நுட்ப சேவை விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டதற்கு ஏற்புடைதான ஓய்வூதிய கொடுப்பனவையும் நிலுவைகளையும் வழங்குமாறு கோரி 2020.03.06 ஆம் திகதியிடப்பட்ட முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறிக்கை கோரப்பட்ட பின்னர், 2008.01.01 இலிருந்து 2019.06.30 ஆம் திகதி வரையிலான நிலுவைகளுடன் 2020 யூலை ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது என அறியதரப்பட்டது.

ஓய்வூதிய திணைக்களத்திடமிருந்து 2020.08.01 ஆம் திகதி அறிக்கை கோரப்பட்டதன் பின்னர் இரண்டு மாதங்களுக்குள் தாமதமடைந்துள்ள வருடங்களுக்கான ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியும் என கூறப்பட்டதால் முறைப்பாட்டாளர் மகிழ்ச்சியடைந்துள்ளார். மிகவும் முதியவரான முறைப்பாட்டாளர் அரசாங்க சேவையில் மிகவும் அர்ப்பணிப்புடன் தனது சேவைகளை நிறைவேற்றிய பின்னர் அவர் பெற்றுக்கொண்ட பதவியுயர்வுக்கு ஏற்புடையதாக சம்பளம் மாற்றியமைக்கப்படவில்லை என மிகவும் கவலையுடனும் சிறிதளவு நம்பிக்கையுடனும் தனது முறைப்பாட்டை எமக்கு முன்வைத்துள்ளார். எமக்கு முறைப்பாட்டை முன்வைத்து குறுகிய காலப்பகுதியினுள் சம்பள நிலுவைகளை பெற்றுக் கொண்டதையிட்டு மிகவும் சந்தோசமடைந்துள்ளதால் எமக்கு கடிதம் மூலம் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

**கோவை இலக்கம்- OMB/P/2/7/414** **பெயர்- திரு.கே.ஜி.பந்துபெம**

முறைப்பாட்டாளர் திரு.கே.ஜி. பந்துபெம என்பவர் இலங்கை இராணுவ மருத்துவ படையின் வகுப்பு -1 இல் அங்கீகாரம் பெற்ற அலுவலரொருவராக 22 வருடங்கள் 08 மாதங்கள் 27 நாட்கள் சேவைபுரிந்த பின்னர் 2007.12.14 ஆம் திகதி ஓய்வூபெற்றுள்ளார். அதன்பின்னர் அவர் செயலுறு சேவையில் இணைந்து 2013.02.29 ஆம் திகதியிலிருந்து 03 வருடங்கள் 02 மாதங்கள் மற்றும் 09 நாட்கள் சம்பளம் மற்றும் ஓய்வூதிய அடிப்படையில் சேவையாற்றி 2016.05.07 ஆம் திகதியன்று 55 வயதை பூர்த்தி செய்து ஓய்வூபெற்றுள்ளார்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கு அமைய, 2015.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான அலுவலர்களின் சம்பளம் 2016.01.01 இலிருந்து செயல்வலுப்பெறும் வண்ணம் அதிகரித்துள்ளது. அதற்கமைய, முப்படைகளினதும் சம்பள அதிகரிப்பு நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. முறைப்பாட்டாளருக்கு இரண்டு சம்பள உயர்வுகளே வழங்கப்பட்டிருந்ததால் அவர் 03/2016 இலக்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய, சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை என எமக்கு முறைப்பாடொன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கை இராணுவப் படை பணிப்பாளர் (சம்பளங்கள் மற்றும் ஆவணங்கள்) இடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. 03/2016 ஆம் இலக்கம் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைய, இராணுவ படைக்கு அந்நேரத்தில் ஏற்பட்ட தேவையை கருத்தில் கொண்டு அவர்களால் வழங்கப்பட்ட சேவை மூலம் சம்பளம் மற்றும் ஓய்வூதிய அடிப்படையில் சேவை வழங்கிய அலுவலர்களின் சம்பள மாற்றங்கள் தொடர்பில் மேலதிக அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. நீண்ட கால கடித தொடர்புகளின் பின்னர் பாதுகாப்பு அமைச்சிடம் இவ்விடயம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட போது, முறைப்பாட்டாளரால் கோரப்பட்ட ஓய்வூதிய சம்பள மாற்றம் தொடர்பாக சட்டமா அதிபரிடம் பெற்ற ஆலோசனையின் பின்னர், 03/2016 ஆம் இலக்க

முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு அமைய, சீராக்கப்பட்ட ஓய்வூதிய சம்பளம் முறைப்பாட்டாளருக்கு வழங்க முடியும் என இறுதியாக அறிவிக்கப்பட்டது. முறைப்பாட்டாளர், ஏற்புடைய நடவடிக்கை மூலம் சம்பள உயர்வை பெற்றுக்கொண்டதாக 2020.02.12 ஆம் திகதிய கடிதம் மூலம் நன்றியை தெரிவித்திருந்தார்.

முறைப்பாட்டாளர் 2013 ஆம் ஆண்டிலிருந்து ஏற்புடைய அதிகாரிகளிடம் சம்பள அதிகரிப்பை கோரியிருந்தும் அவ்வதிகாரிகள் சாதகமான பதிலை வழங்க தவறியுள்ளார்கள். அதன்பின்னர் ஏமாற்றமடைந்த முறைப்பாட்டாளர் எமக்கு தனது முறைப்பாட்டை முன்வைத்துள்ளார். இறுதியில் முறைப்பாட்டாளர் நல்லதொரு பலனை பெற்றுக்கொண்டுள்ளார். இப்பலனை முறைப்பாட்டாளர் மட்டுமல்ல மேல் கூறப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய முறைப்பாட்டாளருடன் ஓய்வுபெற்றுக் கொண்ட பலரும் அத்துடன் தற்போது சேவையில் உள்ளவர்களுக்கும் இவ்வதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இவர்களுக்கு சம்பளத்தில் கணிசமானளவு தொகை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. திரு.பந்துபெம என்பவரால் எமது அலுவலகத்திற்கு முன்வைத்த முறைப்பாட்டின் இறுதி விளைவாக பெருமளவிலான மக்கள் தமது சம்பளத்தில் அதிகரிப்பை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

**கோவை இலக்கம்- OMB/P/2/9/833** **பெயர்- திருமதி. சந்தமாலி பிரியந்திகா**

முறைப்பாட்டாளர் திருமதி சந்தமாலி பிரியந்திகா என்பவர் ஏற்புடைய ஆவணங்களை சமர்ப்பித்து இலக்கம் 427 என்னும் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கிழக்கு பஹல கொஷ்கம என்னும் இடத்திலிருந்து, இலக்கம் 440 என்னும் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நெலுவந்துடுவ என்னும் இடத்திற்கான வதிவிட மாற்றம் செய்து தருமாறு கோரிக்கை விடுத்தும், கிராம அலுவலர் அக்கோரிக்கையை நிறைவேற்ற மறுத்துள்ளார் இதனால் அவருக்கு தேசிய அடையாள அட்டையை தயாரிக்க முடியாதுள்ளதாகவும் எமக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் சீதாவக பிரதேச செயலாளரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. அறிக்கை கோரப்பட்ட பின்னர் பிரதேச செயலாளர் இப்பணியை செய்து கொடுக்கும்படி நெலுவத்துடுவ என்னும் பிரிவில் உள்ள 440 என்னும் இலக்க கிராம அலுவலரிடம் அறிவித்தும் அப்பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனவே மனுதாரர் முன்னைய வதிவிடத்திற்கு சென்று அப்பிரிவினூடாக அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும் மேலே கூறப்பட்டது போன்று பணியை நிறைவேற்றாத நெலுவத்துடுவ கிராம அலுவலர் 440 பிரிவில் கடமையாற்றும் கிராம அலுவலரின் கணவர் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலர் ( மேற்பார்வையாளர்) ஆக கடமையாற்றுகிறார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாதவாறு மாவட்ட செயலாளர் ஊடாக அந்த கிராம அலுவலரை நெலுவந்துடுவ கிராம அலுவலர் பிரிவிலிருந்து பாதுக்க பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்துள்ளதாக சீதாவாக்க பிரதேச செயலாளரினால் எமக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.

**கோவை இலக்கம்- OMB/P/2/10/1601** **பெயர்- திரு.எஸ்.சீ.லீலாரட்ண**

2020 ஆம் ஆண்டில் இரத்தினபுரி எம்பிலிபிட்டியாவில் உள்ள சனாதிபதி கல்லூரியின் தரம் 1 இற்கு திரு. சீ.லீலாரட்ணாவின் பிள்ளையை அனுமதிப்பதற்கான "அண்மையில் உள்ள வதிவிடம்" என்னும் வகைப்படுத்தலின் கீழ் நேர்காணலுக்கு முறைப்பாட்டாளார் சமுகமளித்திருந்தார் அதனடிப்படையில் அவரால் முன்வைக்கப்பட்ட உறுதிக்கு வழங்கப்பட்ட புள்ளி தவறானதாக உள்ளது என அவர் எமக்கு சமர்ப்பித்த 2020.02.06 ஆம் திகதிய முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

அவ்விடயங்களை கருத்தில் கொண்ட பின்னர் இரத்தினபுரி/ எம்பிலிபிட்டியா/ சனாதிபதி கல்லூரி அதிபரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. 2019.09.04 ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மகாவலி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கடிதத்தில் மனுதாரர் வதியும் இடத்தின் அனுமதிப்பத்திரம் மனுதாரரின் தாயின் பெயரில் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே வதிவிடம் தொடர்பில் புள்ளி வழங்கும் போது இவ்விடயத்தை அடிப்படையாக கொண்டே புள்ளிகள் வழங்கப்பட்டன என சனாதிபதி கல்லூரி அதிபர் தனது 2020.03.02 ஆம் திகதிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இலங்கை மகாவலி அதிகாரசபை, முறைப்பாட்டாளர் வதியும் இடம் முறைப்பாட்டாளரின் வதிவிடம் என கூறி 2019.10.09 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவித்திருந்தும், மேல்முறையீட்டு சபைக்கு புதிதாக புள்ளிகளை கடிதம் மூலம் வழங்க முடியாததால் மனுதாரரின் பிள்ளைக்கு புள்ளிகள் வழங்கப்படவில்லை என அதிபர் அறிவித்திருந்தார்.

மகாவலி அதிகாரசபையினால் 2019.09.04 ஆம் திகதி வழங்கப்பட்ட முதலாவது கடிதத்தில் விடயத்தை சரியாக குறிப்பிடாததால் முறைப்பாட்டாளரின் பிள்ளை பாடசாலை அனுமதிக்கு தேவையான புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளது என தெளிவாகியுள்ளது. எனவே நாம் இவை தொடர்பான விடயங்களை 2020.06.29 ஆம் திகதிய கடிதம் மூலம் கல்வி அமைச்சுக்கு அறிவித்திருந்தோம்.

கல்வி பணிப்பாளரின் (தேசிய பாடசாலைகள்) கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயத்தை ஆராய்ந்த போது முறைப்பாட்டாளரின் பிள்ளைக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என தெளிவாகியுள்ளதால் முறைப்பாட்டாளரின் பிள்ளையை இரத்தினபுரியில் உள்ள எம்பிலிபிட்டியா சனாதிபதி கல்லூரியில் தரம் 01 இல் சேர்ப்பதற்கு அனுமதி வழங்க அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என 2020.09.03 ஆம் திகதிய தனது அறிக்கையின் மூலம் எமக்கு அறிவித்துள்ளார். அதனை தொடர்ந்து திரு.எஸ்.சி.லீலாரட்ண, தனது பிள்ளைக்கு இரத்தினபுரி/எம்பிலிபிட்டியா/சனாதிபதி கல்லூரியில் 2020.09.09 ஆம் திகதி அனுமதி கிடைத்துள்ளதாக 2020.09.28 ஆம் திகதிய கடிதம் மூலம் நன்றி கூறி எமக்கு அறிவித்துள்ளார்.

அதே வகையான முறைப்பாடொன்று திரு.கே.பி டபிள்யூ.எஸ். நிரோசனா என்பவரால் 2020.02.24 ஆம் திகதிய கடிதம் மூலம் எமக்கு அனுப்பப்பட்டிருந்தது. அம்முறைப்பாடு தொடர்பில் தொடர்ச்சியான நடவடிக்கை மூலம் மனுதாரரின் மகளுக்கு பாடசாலையில் சேர்ப்பதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. எமது தலையீட்டின் மூலம் OMB/P/2/10/1609 என்னும் இலக்க கோவையின் கீழ் முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இரத்தினபுரி/ எம்பிலிபிட்டியா/ சனாதிபதி கல்லூரிக்கு தரம் -1 இல் முறைப்பாட்டாளரின் மகளை அனுமதித்துள்ளனர்.

திரு. ஆர்.பி.ஜே. ரண்கோந்தே என்பவர் இலங்கை போக்குவரத்து சபையில் ஏறக்குறைய 33 வருடங்கள் சேவையாற்றியதாகவும் அவர் செவிப்புலன் குறைபாடு மற்றும் ஏனைய நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தமையால் இலங்கை போக்குவரத்து சபையின் தன்னிச்சையான ஓய்வுபெறுதல் தொடர்பான நடைமுறைக்கு அமையவும், சுற்றறிக்கை இலக்கம் NQ 01 மற்றும்/ அல்லது 2016 இல. 01 (1) இற்கும் அமையவும், 2016.10.14 ஆம் திகதியன்று ஓய்வூபெற்றுள்ளதாக எமக்கு அனுப்பிய முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார். மேலும் ஓய்வு பெற்றதன் காரணமாக அவருக்கு ரூபா 2048970/- நட்ட ஈடாக வழங்கப்படுதல் வேண்டும் எனவும் ஆயினும் அவருக்கு ரூபா 1862700/- மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கு வழங்கவேண்டிய நிலுவை ரூபா 186270/- ஐ தனக்கு வழங்குமாறு தனது 2018.03.21 ஆம் திகதியிட்டு எமக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த விடயங்களை அவதானித்த பின்னர் இலங்கை போக்குவரத்து சபையின் பொது முகாமையாளரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது 2018.07.09 மற்றும் 2018.11.13 ஆகிய திகதிகளில் பிரதி பொது முகாமையார் ( நிர்வாகம்) இனால் அனுப்பப்பட்ட அறிக்கைகளில் முறைப்பாட்டாளர் ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழை தனியார் கோவைக்கு சமர்ப்பிக்க தவறியுள்ளமையினால் அக்காலப்பகுதி அவரது சேவைக்காலத்தினுள் உள்ளடக்கப்படவில்லை. எனவே அவரது சேவைக்காலம் 30 வருடங்களாக கணக்கிடப்பட்டு நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. பயிற்சி உட்பட மொத்த சேவைக்காலம் 33 ஆண்டுக்களாக கணக்கிடப்படுகிறது.

எவ்வாறாயினும் முறைப்பாட்டாளர் தான் தனது ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றது தொடர்பிலான சான்றிதழை தனியார் கோவையில் இணைத்துள்ளதாகவும். தனக்கு ஓய்வூதிய பணிக்கொடை வழங்கும் போது 33 வருட சேவை காலத்தை உள்ளடக்கியே வழங்கியதாகவும் ஆயினும் ஓய்வூதியம் கணிப்பிடும் போது மட்டுமே 30 வருடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

அதன்பின்னர் இவ்விடயம் தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. நட்ட ஈடு தொடர்பாக விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னரே மனுதாரர் பயிற்சி சான்றிதழை சமர்ப்பித்துள்ளதால் பணிக்கொடை கணிப்பீட்டில் அப்பயிற்சி வருடம் உள்ளடக்கப்பட்டது என தனது 2019.03.29 ஆம் திகதிய கடிதம் மூலம் இலங்கை போக்குவரத்து சபை எமக்கு அறிவித்திருந்தது.

எவ்வாறாயினும் மேலே உள்ள சகல விடயங்களையும் கருத்தில் கொண்டு, முறைப்பாட்டாளர் இலங்கை போக்குவரத்து சபை பயிற்சி சபைக்கு தனது பயிற்சி சான்றிதழை அனுப்பியுள்ளார் எனவே ஆவணங்கள் தமதமாக அனுப்பியிருந்தாலும் 3 வருடங்களுக்கான நட்ட ஈட்டு தொகையை வழங்க அலட்சியம் செய்தல் நியாயமானதல்ல அத்துடன் முறைப்பாட்டாளர் பயிற்சி காலம் தொடர்பில் மானியம் பெற்றுக்கொள்வதற்கு உரிமை இருக்குமானால் அக்காலத்துக்கான நட்ட ஈடு கட்டாயம் வழங்கப்படுதல் வேண்டும் என எனது 2019.06.04 ஆம் திகதிய கடிதம் மூலம் இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி முகாமையாளருக்கு (நிர்வாகம்) அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்பின்னர் திரு.ஆர்.பி.ஜே ரண்கோதே என்பவர் 2020.01.24 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்து நட்ட ஈட்டு நிலுவைகளை தான் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது எனவும் இவ்விடயம் தொடர்பாக எமது அலுவலகத்திற்கு நன்றி கூறியுள்ளார்.

எமது அலுவலகத்தின் தலையீட்டின் மூலம் நிவாரணங்களை பெற்றுக்கொண்ட முறைப்பாட்டாளர்களின் பாராட்டுக் கடிதங்களின் பிரதிகள் இவ்வறிக்கையை நிறைவு செய்யும் நோக்கத்திற்காக அறிக்கையின் இறுதியில் இணைக்கப்படுகின்றன.